

தஞ்சை நகராட்சி

நூறாண்டு நிறைவு விழா

1866 — 1966



சிறப்பு மலர்

தஞ்சை நகராட்சி

நூறாண்டு நிறைவு விழா

1866 — 1966

சிறப்பு மலர்.

அச்சிட்டோர் :
மகாலிங்கம் அச்சகம், தஞ்சை.



திரு. V. வேணுகோபால் நாயுடு
நகராட்சி மன்றத் தலைவர்

முன்னுரை.

வரலாற்றுப் புகழ் படைத்த சோழர் தலைநகராக விளங்கிய தஞ்சை மாநகரில் தஞ்சை நகராட்சி மன்றம் தோன்றி நூறு ஆண்டுகள் நிறைவெய்தி தஞ்சை நகராட்சி நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடுகிறோம்.

தஞ்சையைத் தலைநகராகக்கொண்டு ஆண்ட பேரரசர்கள் கட்டிக் காத்த மாட மாளிகைகளையும், கூட கோபுரங்களையும், உலக வரலாற்றுப் புகழ்பெற்ற சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய பெருவுடையார் கோயிலையும், நூறு ஆண்டு காலமாக இந் நகர் மன்றம், தமிழர்களின் தொன்மையான நாகரீக அடிப்படையில் நகரின் முன்னேற்றத்திற்கு ஆற்றிய பணியில், இந்நகரம் அடைந்துள்ள சீரும் சிறப்பினையும், எண்ணிப்பார்க்கும்போது, உண்மையிலேயே நாம் அவர்களுக்குக் கடமை உணர்ச்சி யுடையவர்களாக இருக்கிறோம் என்றால் அது மிகையாகாது.

நூறு ஆண்டு காலமாக நம் நகர மக்களுக்கு மன்றம் ஆற்றிய தொண்டினால் பெற்ற பெரும் பயனை எண்ணி, அவற்றிற்குக் காரண கர்த்தர்களாக உழைத்த உத்தமர் களைப் பாராட்டவும், இந்த ஆண்டுமுதல் மேலும் மன்றம் மக்களுக்கு ஆற்றவேண்டிய சீரிய பணியினை திட்டமிட்ட முறையில் செயல்படுத்தி நகரின் முன்னேற்றத்தை மேலும் மேலும் சிறப்பிக்கவும், இவ்விழா அடிப்படையாக அமைந்துள்ளது.

இவ் விழா சிறப்பாக நடைபெற உதவிய நகராட்சி உறுப்பினர்கள், விழாக் குழுவினர், ஆணையர், அதிகாரிகள், அலுவலர்கள், மற்றும் சிறப்புவிழா மலருக்கு விளம்பரமும், பொருளுதவியும் கொடுத்து உதவியவர்கள், கவிதையும், கட்டுரையும் எழுதி மலரைச் சிறப்பித்த அன்பர்கள் ஆகிய அனைவருக்கும் விழாக் குழுவின் சார்பில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வாழ்த்துச்செய்தி தந்த பெரியோர் களுக்கும் விழாக் குழுவினர் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சை நகரின் முன்னேற்றத்திற்காக உழைக்க இம்மன்றம் கொண்டுள்ள உறுதியினை நிறைவேற்ற மேலும் தொடர்ந்து ஒத்துழைப்பினை நல்குமாறு, அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

V. வேணுகோபால் நாயுடு,
தலைவர்.
தஞ்சாவூர் நகராட்சி மன்றம் &
நூற்றாண்டு விழாக்குழுத் தலைவர்.

தஞ்சாவூர் நகராட்சி மன்றம்.

-::::-

தலைவர்.

திரு. V. வேணுகோபால் நாயுடு.

துணைத் தலைவர்.

திரு. A. V. R. S. கிருஷ்ணமூர்த்தி

உறுப்பினர்கள் :

திரு. G. உலகநாதன்
,, க. சுந்தரம்பிள்ளை
,, C. சாமிநாதன்
,, T. R. சங்கர்
,, N. சுந்தரேசன்
,, S. வேம்பையன்
,, G. சுல்தான் மொய்தீன்
,, S. அருணுசலம்
திருமதி. I. மேரி அம்மாள்
திரு. S. பெத்தண்ணன்
,, G. மகபுல் உசேன்
,, S. மாணிக்கம்
,, R. கிருஷ்ணய்யர்
,, T. K. கோவிந்தன்
,, T. K. சீனிவாசன்
,, S. நடராஜன்
,, A. சக்ரவர்த்தி முதலியார், B. A.,
திருமதி. V. பிரேமா
திரு. T. S. வெங்கிடுசாமி நாயுடு
,, D. சுந்தரமூர்த்தி
,, T. V. சேது
,, T. V. நடராஜ வன்னியர்
,, P. மாரிமுத்து
,, R. அப்துல் சுபான்
,, G. கிருஷ்ணபிள்ளை
,, S. முத்துசாமி பாண்டியன்
,, முராரி R. ராமச்சந்திரய்யர்
,, B. E. ரெங்கசாமி பாகவதர்
திருமதி. A. அன்னபூரணம்
திரு. S. சிவப்பிரகாசம்
,, T. C. சீனிவாசன்
,, S. நாகராஜன்
,, T. ஞானசாமி
,, S. நடராஜமாணிக்க நாட்டார்

: : :

தஞ்சாவூர் நகரமன்ற ஆட்சி

அலுவலர்கள்

-:::::-

ஆணையர் :

திரு. S. ராஜகோபாலன், M. A.,

ஆணையர் நேர்முக உதவியாளர் :

திரு. K. நடராஜன் B. A.,

நகராட்சி பொறியர் :

திரு. S. சிவராமன்.

நகராட்சி மின் பொறியர் :

திரு. G. வெற்றிவேல், B. E.,

நகரமைப்பு அதிகாரி :

திரு. K. T. கிருஷ்ண ராவ்.

அலுவலக மேலாளர் :

திரு. V. சிவசுப்ரமணியன்.

திரு. V. ராமையன், (offg.)

அலுவலக வருவாய் அதிகாரி :

திரு. A. M. அமலதாஸ்.

அலுவலகப் பொதுக் கணக்கர் :

திரு T. K. தண்டாயுதபாணி.

மின் கணக்கர் :

திரு. K. N. கோவிந்தராஜலு.

: : :

SECRETARY TO THE PRESIDENT OF INDIA,
RASHTRAPATI BHAVAN,
NEW DELHI-4.
December 29, 1966.

No. F. 9(3)—G/66.

Dear Shri Naidu,

The President sends his best wishes on the occasion of the Centenary of the Thanjavur Municipal Council.

Yours sincerely,

(Sd.) NAGENDRA SINGH.

PRIME MINISTER'S SECRETARIAT

New Delhi-11,

December 27, 1966.

Dear Sir,

The Prime Minister is glad to know that the Thanjavur Municipal Council has completed one hundred years of its life. She sends her greetings on the occasion to the citizens of this ancient centre of art and of celebrated crafts and wishes success to the centenary celebrations.

Yours faithfully,

(Sd) (H. Y. SHARADA PRASAD)

Deputy Information Adviser

to the Prime Minister.

RAJ BHAVAN
Madras Governor's Camp PO.,
December 23, 1966,

MESSAGE.

............................I am glad to know that the Thanjavur Municipality will celebrate its Centenary.......... .... I offer my greetings to the Chairman and Members of the Municipal Council on the occasion and wish the celebrations success.

(Sd.) UJJAL SINGH,
Governor of Madras.

C. A. RAMAKRISHNAN, I. C. S.
Chief Secretary to the Government of Madras.

Fort St. George,
MADRAS—9.

MESSAGE

I am very glad to learn that the Thanjavur Municipal Council will be celebrating its Centenary.................................... .... The name of the district has become well-known all over India as one of the granaries of the country and the headquarter town of the district has been attracting a large number of visitors both Indian and foreign to visit the famous Brahadeeswara temple and the Saraswathi Mahal library and also the various schemes in force to step up agricultural production. It is therefore highly necessary that the amenities to be provided in the town should constantly expand and also increase in quality. In this great task, the Thanjavur Municipal Council has been playing a great part and has also to continue to do so. I hope that the occasion of the Centenary celebration will be made use of to redouble all efforts in this connection.

(Sd) C. A. Ramakrishnan,

7—1—67.

சி. என். அண்ணதுரை
முதலமைச்சர்

கோட்டை
சென்னை-9
3—7—1967

நீண்ட வரலாறும், சரித்திரச் சின்னங்களும் கொண்ட தஞ்சை நகருக்கு, புகழ் மணம் அதிகம். அந்த அளவுக்கு இந்நகரம் புது மணமும் பெறவேண்டியது முக்கியம். இயற்கை அமைப்பு கெடாமல் நவீன வசதிகள் அனைத்தும் போதிய அளவில் கிடைக்க வேண்டும். தஞ்சாவூர் நகராட்சி நூற்றாண்டு விழா அந்த வகையில் மேலும் பல புதிய வேலைகள் தொடங்குவதற்கு வழி வகுக்கவேண்டும் என்று ஆசைப் படுகிறேன். விழா வெற்றிகரமாக நடைபெறவும், சிறப்பு மலர் முயற்சிகளுக்கும் என் வாழ்த்துக்கள்.

அண்ணாதுரை

V. R. NEDUNCHEZHIYAN
MINISTER FOR EDUCATION
AND INDUSTRIES

FORT ST. GEORGE
MADRAS-9
June 29, 1967

MESSAGE

Thanjavur, famed in history, literature and legends, is one of the oldest towns of Tamil Nad. Like all old towns, Thanjavur has its own peculiar civic problems. The Thanjavur Municipality which will celebrate its Centenary in July this year has been looking after the civic needs of the town with a fair measure of success. I am sure its experience in civic administration coupled with the growing awareness among the people of their duties and responsibilities will help the Municipality to serve as a model for other Municipalities. I send my best wishes for the success of the Centenary Celebrations.

(V. R. Nedunchezhiyan)

ஏ. கோவிந்தசாமி
விவசாய அமைச்சர்

செயின்ட் ஜார்ஜ் கோட்டை
சென்னை-9
10—7—1967

தஞ்சை நகராட்சி நூற்றாண்டு விழா இம்மாதம் கடைசி வாரத்தில் கொண்டாட இருப்பது அறிந்து மிக்க மகிழ்ச்சி.

மக்களுக்கு உணவளிக்கும் வேளாண்மைப் பெருக்கத்தில் முதலிடம் வகிக்கிறது தஞ்சை மாவட்டம். சிந்தைக்கு உண வளிக்கும் கலைகளை வளர்ப்பதிலும் தஞ்சை ஏற்றம் பெற்றதாக வுள்ளது. தஞ்சை நகராட்சி நிர்வாகம், இந்தப் புகழை மேலும் உயர்த்தும் விதத்தில் மக்களுக்கு புதிய பல வசதிகளைச் செய்து தரும் என்று நம்புகிறேன்.

தஞ்சை நகராட்சி நூற்றாண்டு விழா இனிது நிறைவேற எனது நல் வாழ்த்துக்கள்.

A. கோவிந்தசாமி

எஸ். ஜே. சாதிக் பாட்சா
சுகாதாரத்துறை அமைச்சர்

செயின்ட் ஜார்ஜ் கோட்டை
சென்னை-9
6—7—67

அன்புடையீர்,

வரலாற்றுப் புகழ்பெற்ற தஞ்சை, சிந்தனை வளத்திலும் தலைசிறந்து விளங்குகிறது. நல்வாழ்வுக்குரிய வசதிகளைப் பெருக்குவதில் நகராட்சியின் பணியில் பொதுமக்கள் இணைந்து ஒத்துழைத்தால் சிறப்பான முன்னேற்றம் காணமுடியும். நகராட்சி நூற்றாண்டு விழா, இந்த வகையில் புத்துணர்ச்சியை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையோடு, விழா இனிது நிறைவேற என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எஸ். ஜே. சாதிக்

K. A. MATHIALAGAN
MINISTER FOR FOOD.

FORT ST. GEORGE,
MADRAS-9.

21—7—67.

தமிழகத்தில் நெற்களஞ்சியமாக விளங்கும் தஞ்சை மாவட்டத்துக்கு கலைகளின் நிலைக்களனாக விளங்கும் பெருமையும் உண்டு தஞ்சை மாநகரம் மாவட்டத்தின் இப்பெருமையை மேலும் உயர்த்தும் வகையில் புகழ்பெற்று விளங்குகிறது. இந்நகராட்சியின் நூற்றாண்டு விழாக் கொண்டாடுவது குறித்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன். தஞ்சை நகரத்தில் வசதிகள் பெருகவும் நலம் வளரவும் இந்த விழா தக்க தூண்டுகோலாக அமையும் என்ற நம்பிக்கையோடு, விழா இனிது நிறைவேற என் நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

K. A. மதியழகன்

டாக்டர் சத்தியவாணி முத்து
அரிசன நல, செய்தித்துறை
அமைச்சர்.

செயின்ட் ஜார்ஜ் கோட்டை,
சென்னை-9.

புகழும் அழகும் பெற்ற தஞ்சாவூர் நகரை நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மக்கள் வந்து பார்க்கிறார்கள். நகராட்சி முறை, மக்களுக்கு வசதிகள் ஆகியவைகளில், தஞ்சை, இந்தப் புகழுக்கேற்ற எடுத்துக்காட்டான நகராக விளங்குவது அவசியமாகும். தஞ்சை நகராட்சி நூற்றாண்டு விழாவும், நகராட்சியின் சீரிய முயற்சிகளும் இனிது நிறைவேற என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளு கிறேன்.

சத்தியவாணி முத்து

MADURAI UNIVERSITY.

T. P. MEENAKSHISUNDARAN
Vice-Chancellor

UNIVERSITY BUILDING
MADURAI—2

27. Dec. 1966.

MESSAGE.

Prof. T. P. Meenakshisundaran, Vice-Chancellor, Madurai University is glad to learn that the Thanjavur Municipal Council is completing a 100 years of its existence and in that connection a souvenir is being brought out. He sends his very best wishes for the success of the Centenary Celebration.

T. P. MEENAKSHISUNDARAN.

J. A. AMBASANKAR, I. A. S.
Commissioner,

CORPORATION OF MADRAS,
RIPON BUILDINGS,
MADRAS-3.

29th December '66.

Sir,

Ref :— Your letter 26—12—66.

I am glad to note that the Thanjavur Municipal Council has decided to publish a Souvenir on the occasion of the Centenary Celebration,... .... I have great pleasure in sending my best wishes for the success of the Celebration.

Yours faithfully,

(Sd) J. A. Ambasankar,

தொலைபேசி: 2175.

டாக்டர் அ. சிதம்பரநாதன், எம். ஏ., எம். எல். சி.
முதல்வர்,
தியாகராசர் கல்லூரி.

அஞ்சற்பெட்டி 107
மதுரை-9.

31—12—66.

பேரன்புடையீர்,

நலம். தஞ்சாவூர் நகராண்மைக் கழகத்தார் நூற்றாண்டு விழாக் கொண்டாட முன்வந்திருப்பது குறித்துப் பாராட்டுகிறேன். விழா இனிது நிறைவேறுமாறும், நகராண்மைக் கழகத்தினர் மேன்மேலுஞ் சிறந்த நற்றொண்டுகள் ஆற்றித் தஞ்சாவூருக்குப் பெரும்புகழ் சேர்க்குமாறும் அருளும்படி இறைவனை வேண்டுகின்றேன்.

அன்புள்ள,

அ. சிதம்பரநாதன்.

Rt. Rev. Dr. R. A. SUNDARAM,
D. D., M. A., L. C. L.,
Bishop of Thanjavur.

BISHOP'S HOUSE,
P. B. No. 26, THANJAVUR (S. India)
Date . 13th. January. 1967.

Dear Sir,

I am happy to know from your letter that the Thanjavur Municipal Council is going to have the centenary celebrations of the Municipality ....

Within these one hundred years, the town of Tanjore has developed in all directions—Better roads, electrification of the town, better sanitation, erection of new house blocks in different parts of this ancient town, up-to-date market facilities, very convenient and spacious town Bus Stand. Several municipal schools and modern hospitals and dispensaries in different parts of the town, the remodelling of the Sivaganga Garden with all facilities for the Tanjore public to have evening recreation, etc. which are some of the achievements of the Tanjore Municipality of which anyone can be rightly proud.

With the rapid industrialization of the suburbs of Tanjore, and the coming in of the Medical College and two Arts Colleges within the town of Tanjore and the increase in the population of the town itself the work of the Municipality has considerably increased. I hope and pray that this great municipality will render even greater and more efficient service to the public in the future.

I wish all who have contributed to the present progress God's choicest blessings I wish the Centenary Celebrations every success.

R. A. Sundaram,
Bishop of Tanjore.

தஞ்சாவூர் நகராட்சி நூற்ருண்டு விழா.

வாழ்த்துச் செய்தி.

தமிழ் நாட்டின் பற்பல நகரங்களில் நகராட்சி ஏற்பட்டு நூறு ஆண்டுகள் ஆகின்றன. தஞ்சாவூர் நகராட்சியும் நூற்ருண்டு விழா கொண்டாடுவது அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த விழாவின்போது நகர மக்களின் முக்கிய தேவைகளான குடிதண்ணீர்த் திட்டம், கழிவுநீர் வடிகால் திட்டம் ஆகியவைகளைப் பற்றி தெரிந்துகொள்வது அவசியமாகும். தஞ்சை மாநகரின் மக்களுக்கு இதுவரை வெண்ணுற்றிலிருந்து குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. முதன் முதலில் அறுபதாயிரம் மக்களுக்கு 15 காலன் வீதம் தண்ணீர் கிடைத்து வந்தது. 1959-ம் ஆண்டு தமிழகஅரசாங்கம் தஞ்சை நகர குடிதண்ணீர்த் திட்ட அபிவிருத்தியின் முதற் பகுதிக்கு 16 லட்சம் ரூபாய்க்கு அனுமதியளித்தது. அதன்படி ஒன்றரை லட்சம் மக்களுக்கு 15 காலன் வீதம் குடிதண்ணீர் வழங்க திட்ட வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. இத்திட்டத்தின் மூலமாகவும் போதுமான அளவிற்கு குடிதண்ணீர் கிடைக்கவில்லை. அதனுல் இடைக்கால் குடிதண்ணீர் அபிவிருத்தி திட்டத்திற்கு 1966-ஆம் ஆண்டு மேலும் இரண்டு இலட்சத்து 48 ஆயிரம் ரூபாய்க்கு அனுமதியளிக்கப்பட்டது. இத்திட்டத்தின் பலனுக நகரமக்களுக்கு 10 லட்சம் காலன் குடிதண்ணீர் கிடைக்கும் இதற்கான வேலை யாவும் செவ்வனே நடைபெற்று வருகின்றன.

வெண்ணுற்றிலிருந்து போதுமான அளவு தண்ணீர் கிடைக்காததால் கொள்ளிடம் நதியை ஆதாரமாகக் கொண்டு வகுக்கப்படும் திட்டம் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. நகரமக்களின் தேவை பூர்த்திபெறும் வகையில் திட்டங்கள் வகுக்கப்பட்டு நிறைவேற்றப்படும்

நகரமக்களின் சுகாதார நல்வாழ்விற்கு அவசியமான மற்ருெரு வழி கழிவுநீர் வடிகால் திட்டமாகும். இந்த வசதி தமிழ்நாட்டின் பெரும்பாலான நகரங்களில் இன்னும் ஏற்படவில்லை. தஞ்சை நகருக்கு இத்திட்டம் விரைவில் கொண்டுவரப்படும். இதற்கான ஆய்வு வேலைகள் முடிவுபெற்று திட்ட அறிக்கை பரிசீலனையில் உள்ளது.

அரசாங்கத்தின் ஆதரவினுலும் நகரசபையின் ஊக்கத்தினுலும் நகரமக்களின் ஒத்துழைப்பினுலும் இந்த நகராட்சியில் எல்லா வசதிகளும் கிடைக்க வழி வகுக்கப்படும். இந்த நூற்ருண்டு விழா இப்படிப்பட்ட வசதிகளை மேலும் பெருக்குவதற்கு ஊக்கமளிக்கும் என நம்புகிறேன்.

அன்புள்ள,

எம். இ. உசேன்,

தலைமைப் பொறியாளர்,

பொது சுகாதாரப் பொறியியலும் நகராட்சிப்பணிகள்.

சென்னை-5.

உ

குருபாதம்

தருமையாதீனம்

ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

தருமபுரம், மாயூரம் P. O.

....

"ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும்எம் ஆதியே"

தஞ்சை இராசராசேச்சுரம் வரலாற்றுப் புகழ் வாய்ந்த திருத்தலம். தளிக்குளத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமான் பேரருளைத் திருமுறையும் புகழ்ந்து பாடுகிறது. சரபோஜி முதலிய மராட்டிய மன்னர்கள் காலத்தில் தஞ்சையில் கலைவளமும் பிறவும் செழித்தோங்கின. உலகின் பலபகுதிகளிலிருந்தும் அறிவுத்தாகம் உடையோராய் வருபவர்களுக்கெல்லாம் சரசுவதி மகால் நூல்நிலையம் பெரிதும் பயன்பட்டு வருவது கண்கூடு.

இத்தகு தஞ்சை நகராட்சி இப்போது தன் நூற்றாண்டு விழாக் கொண்டாடுவது நம் மகிழ்ச்சிக்குரியது தஞ்சை நகரம் வாழ் பெருமக்கள், கலைவளமும், பக்திவளமும் செறிந்த தம் வாழ்வின் வெற்றியை இவ்விழாவின் வாயிலாக உலகிற்கு விளக்குவது பாராட்டுக்குரியதாகும். நீர்வளமும் நிலவளமும் மிகுந்த தஞ்சைப் பகுதி 'தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச் செல்வரும்' பெருகி குறைவிலாதறங்கள் செய்து நீடு வாழ்க

இப்பழம் பெருநகரின் ஆட்சிமன்றத்தின் தலைவர், உறுப்பினர் ஆகிய எல்லா ஊழியர்கட்கும் நம் வாழ்த்துக்கள்.

செந்தமிழ்ச்சொக்கர் திருவருளால் வாழ்க நலங்கள் ! வாழ்க உலகெலாம் !

உ

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு

ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள் ஸ்ரீமடம், காஞ்சீபுரம்

பண்டையகாலத்தில் தங்களுடைய தார்மிகமான ஆட்சிமுறையினுல் ஜனங்களின் அன்பைப்பெற்று ஜனங்கள் தங்கள் பொருளையும் உழைப்பையும் கல்வியையும் கலைத் திறனையும் தத்வஞானத்தையும் கற்கோவில்களின் மூலமாகவும், நூல்களின் மூலமாகவும் பரம்பொருளான கடவுளுக்கு அர்ப்பணம் செய்யும்படி தூண்டி புகழடைந்த சோழர், நாயக, மஹாராஷ்ட்ர அரசாங்கங்களுக்கு தலைநகராயிருந்ததும், இப்போதும் ஸ்ரீ ப்ருஹதீச்வரஸ்வாமி ஆலயம், கணக்கற்ற சாஸ்திர நூல்கள், சில்பங்கள் அடங்கிய ராஜா சரபோஜி நூல் நிலயம், கலைக்கூடம் முதலிய சரித்ர சின்ஹங்களுடன் விளங்குவதுமான தஞ்சாவூர் நகரத்தை ஆட்சிபுரிந்துவரும் நகரஸபைக்கு ஸமீபத்தில் நூற்ருண்டு விழா நடைபெறுவதை அறிந்து ஸந்தோஷிக்கிருேம்.

இந்நகரஸபையின் அங்கத்தினரும், நிர்வாஹத்தினரும், இங்கு வஸிக்கும் ஜனங்களும் ராஜராஜ சோழன் முதலிய அரசர்களையும், ராஜா கோவிந்த தீக்ஷிதர் முதலிய மந்திரிகளையும் நினைவில்கொண்டு உயர்ந்த மனமும், அன்பும், பண்புமுடையவர்களாய் ஸ்ரீப்ருஹதீச்வரப்பெருமானின் க்ருபையினுல் எல்லா மேன்மைகளையும் அடைவார்களாக.

"இஞ்சிசூழ் தஞ்சை"

சீரோங்கும் புண்யநதி பொன்னியரும் புனல்பாய்ந்து
செந்நெல்விளைந் தோங்கும் நகரம்
சிறப்போடு சரபோஜி மாமன்னன் பல்லாண்டு
செங்கோல் செலுத்திய நகரம்

ஏரோங்கும் மணிமாட கூடங்கள் அரண்மனை
என்றுமே திகழும் நகரம்
ஈசனுமை எஞ்ஞான்றும் இருந்துவாழ் பெருங்கோயில்
எழில்மிக்க பெற்ற நகரம்

பேரோங்கும் பேருந்து நிலையமெனும் பஸ்ஸ்டாண்டு
பெருமையாய் அமைந்த நகரம்
பேசுமுயர் நகரபரி பாலன நூற்றுண்டு
பேணியே நடக்கும் நகரம்

நேரோங்கும் மருத்துவக் கல்லூரி பஞ்சாலை
நிகரில்லா தமைந்த நகரம்

நித்தியமும் தஞ்சையென இத்தரணி கொண்டாட
நீடுபுகழ் பெற்ற நகரம்.

தேசீய கவிஞர்
T. K. துரைராஜன்,
கவாஸ்காரத்தெரு,
தஞ்சை.



திரு A. V. R. S. கிருஷ்ணமூர்த்தி
நகராட்சி மன்றத் துணைத் தலைவர்

திரு. G. உலகநாதன்
1-வது வட்டம்.

திரு. க. சுந்தரம் பிள்ளை
2-வது வட்டம்.

திரு. C. சாமிநாதன்
3-வது வட்டம்.



திரு. T. R. சங்கர்
4-வது வட்டம்.

திரு. N. சுந்தரேசன்
5-வது வட்டம்.



திரு. S. வேம்பையன்
6-வது வட்டம்.



திரு. G. சுல்தான்மொய்தீன்
6-வது வட்டம்.



திரு. S. அருணாசலம்
7-வது வட்டம்.



திரு. A. சக்ரவர்த்தி முதலியார் B. A.,
16-வது வட்டம்.

திருமதி. V. பிரேமா
16-வது வட்டம்.

திரு T. S. வெங்கிடுசாமி நாயுடு
17-வது வட்டம்



திரு D. சுந்தரமூர்த்தி
18-வது வட்டம்.

திரு. T. V. சேது
19-வது வட்டம்.



திரு. T. V. நடராஜ வன்னியர்
20-வது வட்டம்.

திரு. P. மாரிமுத்து
21-வது வட்டம்.

திரு. R. அப்துல் சுபான்
22-வது வட்டம்.

திரு. G. கிருஷ்ண பிள்ளை
23-வது வட்டம்.

திரு. S. முத்துசாமி பாண்டியன்
24-வது வட்டம்.

திரு. முராரி, R. ராமச்சந்திரய்யர்
25-வது வட்டம்.



திரு. B. E. ரெங்கசாமி பாகவதர்
27-வது வட்டம்.

திருமதி. A. அன்னபூரணம்
28-வது வட்டம்.



திரு. S. சிவப்பிரகாசம்
28-வது வட்டம்.

திரு. T. C. சீனிவாசன்
29-வது வட்டம்.

திரு. S. நாகராஜன்
30-வது வட்டம்



திரு. T. ஞானசாமி
31 வது வட்டம்



திரு S. நடராஜமாணிக்க நாட்டார்
32 வது வட்டம்



திரு. கு. காமராஜ் அவர்களுக்கு
நகராட்சி மன்றத் தலைவர் அவர்கள்
மாலை அணிவித்தபோது எடுத்த படம்.

நெஞ்சை அள்ளும் தஞ்சை.

புலவர், **தி. பாலசுப்பிரமணியன்**, *செயலாளர்*,

தொல்காப்பியர் கழகம், தஞ்சாவூர்.

முன்னுரை :

திருமிகு சோழவள நாட்டின் சுடர் விளக்காய்ப் பண்டைப் பெருமைகளையும் இன்றைப் புதுமைகளையும் பெற்றுப் பொலிவது தஞ்சைத் திருநகர். இந்நன்னகர் கவின் கலைக் களஞ்சியமாகவும் கல்விக் களமாகவும் கைத்தொழிற் கலைக்கூடமாகவும் தமிழகத்தின் விழிபோல விளங்குகின்றது. வரலாற்றுச் சிறப்பு மிக்க தஞ்சை வளநகர் தனியழகும் தமிழ் வளமும் நிறைந்தது.

தனிச் சிறப்பு :

இந்நகர் பிற்காலச் சோழப் பேரரசின் பிறந்தகம், மராட்டிய மன்னர்களின் மாநகர், நாயக்க மன்னர்களின் நன்னகர். இந்நாளில், தமிழ்நாட்டின் எட்டாவது பெருநகர்; தென்னக இருப்புப்பாதைப் பெருவழியிலே ஒரு சந்திப்பு; கற்கின்ற இருபாலார்க்கும் கல்வியூட்டும் அரசினர் கலைக் கல்லூரிகள், ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள், பைந்தமிழ் பயிற்றுவிக்கும் புலவர் கல்லூரி, பதினொரு உயர்நிலைப் பள்ளிகள், பல தொடக்கப் பள்ளிகள், எங்கள் வாழ்வும் வளமும் மங்காத தமிழ் என முழங்கும் கரந்தைத் தமிழ்ச் சங்கம், தொல்காப்பியர் கழகம் முதலிய தமிழ் நிறுவனங்கள், சரபோசியரசர் நிறுவிய சரசுவதி மால் நூல் நிலையம் கலைக்கூடம், மைய நூலகம் முதலியன நிறைந்துள்ள கல்வி நகர்.

கூட்டுறவே நாட்டுயர்வு எனக் கொண்டு வாழும் கூட்டுறவு நிலையங்களும் பிணி நீக்கும் பெரும் பணிபுரியும் பெரிய மருத்துவ மனையும் கல்லூரியும் பல்துறைச் செயலகங்களும் சீர்சால் தமிழ் நாகரிகத்தின் சிறந்த படைப்புக்களும் நிறைந்த சிறப்பிடம்; வீணை செய்தல், பட்டு நெசவு, (தாம்பாள) தட்டு வேலைகளிலும் சிறந்த நகர் தஞ்சை.

வரலாற்று வளம் :

தஞ்சையின் இன்னுயிராக இலங்குவது இராசராசேச்சுவரம். விண்ணை யளாவும் விமானமும் கண்ணைக் கவரும் கலைப்படைப்புக்களும் மலிந்த நற்கோயிலாகிய இக்கற்கோயில், 'பெரிய கோயில்' என்னும் பீடுசால் பெயர் பூண்டுப் பொலிகின்றது. இக்கோயிலில் கைவண்ணம் மிக்க கல்தச்சர்கள், விலை மதிப்பற்ற கலையுருவங்களைக் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாகப் படைத்துள்ளனர்.

"மின்னெடும் புருவத் திளமயில் அனையார்
விலங்கல்செய் நாடக சாலை
இன்னடம் பயிலும் இஞ்சிசூழ் தஞ்சை
இராச ராசேச் சுவரம்"

—எனக் கருவூர்த் தேவர் இக்கோயிலைப் புகழ்ந்துள்ளார்.

மும்முடிச் சோழன் என்னும் புகழ்ப் பெயர் பூண்ட இராசராசன் எனும் சோழர்குடிச் செம்மல் செங்கோலோச்சியபோது கட்டப் பெற்றது இக்கோயில். கி. பி. 985 முதல் 1014 வரை ஆண்ட இம்மன்னன் திராவிடக் கட்டிடக் கலையின் நுணுக்கங்கள் விளங்க இதனைக் கட்டினன். கீழை நாட்டைக் காண வருவோர் இதனைக் காணத் தவறுவதில்லை.

தஞ்சை நகராட்சியின் தனிப் பெரும் பணிகள் :

கி. பி. 1866 முதல் இந் நன்நகரின்கண் உள்ளாட்சி என்னும் நல்லாட்சி நடாத்திவரும்

நகராட்சி மன்றம் நூற்றுண்டுகள் நிலைத்து நின்று நிறைபணி செய்துள்ளமை நினைக்க நினைக்க நனி மகிழச் செய்யும் நிகழ்ச்சியாகும். மாட மாளிகைகளும் கூட கோபுரங்களும் அமைந்த அரண்மனையும் பழமையான கோட்டையும் அதனகத்தேயுள்ள அகநகரும் புதுமையான புறநகர்களும் பிற பகுதிகளும் சிந்தைக்கும் செவிக்கும் இனிய சிவகங்கைப் பூங்காவும் பல்வள நலங்களும் நிறைந்த சந்தைகளும் பெரிய பேருந்து நிலையமும் அருமையான பெருஞ்சாலைகளும் புல் பண்ணையும் அமைத்து நகராட்சி, நகர நலங்களை நாளொரு நலமும் பொழுதொரு வண்ணமுமாகப் பெருக்கிக்கொண்டிருக்கிறது.

பல தொடக்கப் பள்ளிகளை நடத்திவரும் தஞ்சை நகராட்சி, சரபோசிக் கல்லூரிக்கும் நல்ல நன்கொடை அளித்து அந்நிலையத்தை வளர்த்துள்ளது. செல்வத்துட் செல்வமாகிய செவிச் செல்வம் பெற நகராட்சித் திலகர் திடலும் மக்களுக்கு நன்கு பயன்படுகின்றது. நகராட்சியின் சார்பில் நடைபெறும் பொதுப் படிப்பகங்களும் குறிப்பிடத்தக்கனவாகும்.

வருங்காலப் பணிகள் :

நூற்றுண்டு விழா நடத்தும் நற்பேறு பெற்ற தஞ்சை நகராட்சியும் மக்களும், நாளிதுவரை நகராட்சியினை நன்கு நடத்தி நல்ல பல பணிகளைச் செய்துள்ள முன்னோர் அனைவருக்கும் நன்றி கூறவும் மேலும் பல பணிகளைச் செய்ய உறுதிகொள்ளவும் வேண்டும்.

தஞ்சையின் தனிச் சிறப்புக்குரிய வகையில் எல்லாப் பருவ நிலைகளிலும் கூட்டங்கள்: கலை நிகழ்ச்சிகள் முதலியன நடைபெறுவதற்கேற்ற வண்ணம் பெரிய மன்றம் ஒன்றினைக் கட்டவேண்டும். திருமண மன்றங்களும் மிக இன்றியமையாதன. அகழிகளைத் தூய்மைப் படுத்திப் புது ஆற்று நீர் பாயவும் வடியவும் வழிவகை செய்து விசைப் படகுப் போக்குவரத்து நடைபெறச் செய்யலாம். நகரிலுள்ள நல்ல குளங்களைத் தூய்மை செய்யவும் பிறவற்றைத் தூர்த்துப் பூங்காக்கள் படிப்பகங்கள் முதலியன அமைக்கவும் ஆவன செய்ய வேண்டும். நகருக்குக் கொள்ளிடம் நீரைக் கொண்டுவந்து, குறைவற வழங்கி, மக்கள் மனம் குளிரச் செய்யவேண்டியது மிக இன்றியமையாதது.

நகரின் மையமான இடத்தில் திருவள்ளுவர் சிலையினை (திருவள்ளுவராண்டு ஈராயிரம் நிறைவின்போது) 1969-இல் திறக்கவும், அமையவிருக்கும் நகரப் பெருமன்றத்திற்குத் திருவள்ளுவர் பெயரிடவும் நகரப் பெருந்தெருக்களுக்கும் பிற பொது இடங்களும் நல்ல தமிழ்ப் பெயர்கள் சூட்டவும் நகராட்சித் துறையில் நல்ல தமிழ் பயன்படுத்தப் பெறவும் ஏற்பன செய்யவேண்டும். போக்குவரத்து மிக்க நகரத் தெருக்களையெல்லாம் அகலமாகவும் நேராகவும் அமைத்தல் மிக மிக இன்றியமையாதது. நகர மக்களின் உளநலமும் உடல் நலமும் பெருகவும் நகர அமைப்பு மேலும் அழகு பெறவும் நல்ல திட்டங்கள் வகுத்துச் செயற்படுத்தவேண்டும்.

முடிவுரை :

“எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே”, என அவ்வைப் பெருமாட்டியார் கூறியவாறு நன்மக்கள் வாழுமிடம் நல்லிடமாகத் திகழ்வது திண்ணம். “வழக்கெனப்படுவது உயர்ந்தோர் மேற்றே.” என்றூர் தொல்காப்பியர். ஆதலின் தஞ்சை நகரின் நலன்களைப் பெருக்கும் நற்பணியில் அனைவரும் தோளோடு தோளாக நின்று ‘‘நகராட்சி நமதே’’ என்னும் நல்ல நினைவுடன் உளமாற உழைத்து உயர்வோமாக.

வெல்க முயற்சி!............

.........வாழ்க தஞ்சை நகராட்சி!

"சரபோஜி பரம்பரை"

[டி. எஸ். கோதண்டராமன்.]

...oOo...

வைஷ்ணவ சமய இலக்கியத்தில் ஒரு ஆண்டாள் இருப்பதைப்போலவே, சைவ சமய இலக்கியத்திலும் ஒரு பக்தை இருக்கிருள். தஞ்சையில் உள்ள சித்த புஷ்கரணியில் (ஐயன்குளம்) சுசர்மா என்ற வணிகருக்குக் கிடைத்த ஒரு பெண் குழந்தை, அன்னபூரணி என்ற பெயருடன் வளர்ந்து, சிவனையே உளமார நேசித்துக் கடைசியில் அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, தெய்வ நிலையை அடைந்தது. இன்றைக்கும் தஞ்சாவூர் கொங்கணேசுவரர் ஆலயத்தில் அன்னபூரணிக்குத் தனியாக ஒரு சந்நிதி இருக்கிறது. அம்பாளுக்கு இருப்பதைப் போலவே!

தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு சிறப்பாக ஆட்சி புரிந்த மகாராஷ்டிர மன்னர்கள் பரம்பரையில் தோன்றி, 'மூத்த இளவரசர்' என்ற பட்டத்துடன் இன்று விளங்கிவரும் ராஜஸ்ரீ ராஜாராம் ராஜா சாகேப் சத்ரபதி அவர்களுடன் உரையாடிக்கொண்டிருந்த போது, மேற்கண்ட விஷயம் தெரியவந்தது.

'சென்ற நூற்றுண்டின் மத்தியில் ஆட்சி புரிந்த சிவாஜி மகாராஜா அவர்களால் இயற்றப்பட்ட 'அன்னபூரணிபரிணயம்' என்ற நாட்டிய நாடகத்தில் நான் சொன்ன விவரங்கள் உள்ளன. தெலுங்கில் எழுதப்பட்டிருக்கும் இந்த நாடகத்தை பாகவத மேளாக் குழுவினர் கொங்கணேசுவரர் கோயிலிலேயே நடித்தது உண்டு.

'அரண்மனை தேவஸ்தானம்' என்னும் ஓர் இலாகாவின் மூலமாக எண்பத்தெட்டு திருக்கோயில்களை மூத்த இளவரசரான இவர் நிர்வகித்து வருவதால் கோயில்களைப் பற்றி அதிகமாகத் தெரிந்துகொண்டிருக்கிருர். "எங்கள் நிர்வாகத்தில் உள்ள கோயில்களை மிகவும் நல்ல முறையில் வைத்துக்கொள்ள வேண்டும் என்றுதான் விரும்புகிறேம். ஆனல் பாருங்கள், ஒரு கோயிலுக்காவது போதுமான வருமானம் இல்லை; மாரியம்மன் கோயில் ஒன்றுதான் இதற்கு விலக்கு" என்ருர் இளவரசர்.

வீரமிக்க அரச வம்சத்தைச் சேர்ந்த இளவரசர் மனம் திறந்து பேசுகிருர். கேட்பவருக்கு எவ்வித அலுப்பும் ஏற்படாவண்ணம் அடுக்கடுக்காய் சுவையானச் செய்திகளை வழங்கிக்கொண்டே போகிருர்.

"நான் வெளியூர்களுக்குப் போனுல் கூடிய மட்டும் தெரிந்தவர்கள் கண்ணில் படாமலேயே வந்துவிடுவேன். ஒரு தடவை மதுரைக்குப் போயிருந்தேன். கோயிலில் அர்ச்சனைகளை முடித்துக்கொண்டு நான் மட்டும் தனியாகச் சிற்பங்களைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அற்புதமான சிற்பங்களின் அழகில் அப்படியே லயித்துப் போய் விட்டேன். கொஞ்ச நேரம் கழித்துத் திரும்பிப் பார்த்தேன். ஒரு மனிதர் என்னையே பார்த்துக்கொண்டிருக்கிருர். அவர் ஒரு பெரிய சைத்ரிகர். எனக்குப் பழக்கமானவர். அவர் அருகே இருந்தவரிடம், 'இவர் யார் தெரியுமா' என்று என்னைச் சுட்டிக் காட்டிக் கேட்பதைக் கண்டுவிட்டேன். ஜாடை காட்டி அவர் வாயை அடைத்துவிட்டு மெல்ல நழுவி விட்டேன்!

"நான் இன்னுர் என்று தெரிவித்துவிட்டுப் போயிருந்தால் என்ன ஆகியிருக்கும்? மேள தாளம், மாலை மரியாதை, சுற்றிவரக் கூட்டம்! இவ்வளவுதானே? தரிசனம் ஆனதும் மரியாதையுடன் வெளியே கொண்டுவந்து விட்டு விட்டு போய்விடுவார்கள். இல்லையா? ஆற

அமர சித்திரங்களையோ, சிற்பங்களையோ, பார்த்து அனுபவிக்கமுடியுமா ?

இவர், 'ஹுஜூர் மாடி அரண்மனை'யில் பரம்பரை பரம்பரையாக வசிக்கும் உரிமையைப் பெற்றிருக்கிருர். ஆனால் இவருக்கென ஒதுக்கி அளிக்கப்பட்டுள்ள அரண்மனைக் கட்டிடத்தை யாருக்கும் விற்க முடியாது. அரண்மனை பாரத அரசாங்கத்தின் சொத்து. அநுபவ உரிமை மட்டும்தான் உண்டு அரச பரம்பரைக்கு.

அதைப் போலவே எல்லா மாஜி மன்னர்களின் நகைகளும் அரசாங்கத்துக்கு உரியன. 'குடும்பச் சொத்து' என்ற பாகுபாடு உண்டாம். குடும்ப நகைகளை தம் இஷ்டம் போல் விற்கவோ, மாற்றிச் செய்யவோ, கூட்டிக் குறைக்கவோ செய்யலாம். ஆனால் அரசாங்கச் சொத்து என்று தீர்மானிக்கப் பட்டிருக்கும் நகைகளை அணிந்துகொள்வதைத் தவிர வேறு எவ்வித உரிமையும் அரச குடும்பத்துக்குக் கிடையாதாம். அது மட்டுமல்லாமல் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை, நகைப் பட்டியலும் கையுமாகக் கலெக்டர் வந்து பரிசோதிப்பாராம்.

உயர்குடியில் பிறந்தவராயினும் கால மாறுதலுக்குக் கட்டுப்பட்டு, "நாங்கள் இப்போது சாமானிய ஜனங்கள்போல் ஆகிவிட்டோம்" என்று அடக்கத்தோடு கூறும் இவர் குணத்தால் உயர்ந்தே விளங்குகிருர்.

'நீங்கள் 'சிவசுதா'வைப் பார்த்துவிட்டீர்களா ?' என்று ஒரு கேள்வியைத் தூக்கிப் போடுகிருர். பதில் சொல்லத் தெரியவில்லை.

"அந்தப் பெயரைச் சொன்னல் உங்களுக்குப் புரியாது, மகாராஷ்டிர மன்னர்களின் தர்பார் மண்டபம்தான் 'சிவசுதா' என்று பெயர் பெற்றிருந்தது. அந்த மண்டபத்தின் விதானத்தில் சிவலிங்க உருவத்தைக் காணலாம். சிவலிங்கத்தின் இருபுறங்களிலும் மகாராஷ்டிர மன்னர்கள் பணிந்து நிற்பதையும் பார்க்கலாம்.

தற்சமயம் தஞ்சை அரண்மனையின் கலைக்கூடமாக மாற்றப்பட்டுள்ள கட்டிடத்தில் சரபோஜியின் சலவைக் கற்சிலை நிற்கும் பகுதி, அக்காலத்தில் நாயக்க மன்னர்களின் கொலு மண்டபமாக இருந்ததாம். அதற்கு அப்போதைய பெயர், 'ராம சுதா' அம்மண்டபத்தின் விதானத்தில் ராம பட்டாபிஷேகக் காட்சிகள் 'சுதை' வேலைப்பாடுகளாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன.

'மண்டபத்தைப் பின்னர் பார்த்துக்கொள்ளலாம். அதோ, மேஜைமேல் வைக்கப்பட்டிருக்கிறதே, 'டைம்பீஸ்', அதில்தான் என்ன வேலைப்பாடு? கடிகாரத்தின் அளவு என்னவோ மற்ற மேஜைக் கடிகாரங்களைப்போலத்தான். ஆனல் அதைச் சுற்றிலும்—மேலும், கீழும் புறங்களிலும்–என்ன நுட்பமான அலங்காரம்! அங்கங்கே தங்கத்தை வைத்து இழைத்தாற்போல்.........'

"ஆமாம், அது தங்க முலாம்தான். இப்போது செய்கிறமாதிரி, பாட்டரியையும் அமிலத்தையும் வைத்துக்கொண்டு செய்தது அல்ல; தங்கப்பொடியை வைத்துத் தேய்த்து தேய்த்து முலாம் பூசியது. ரொம்ப நாளாகிவிட்டது. அதனல்தான் திட்டுத் திட்டாய்த் தெரிகிறது. கடிகாரம்மட்டும் நான் வாங்கி இணைத்தேன்."

நம் பார்வை வனப்புமிக்க கடிகாரத்தை விட்டு மெல்ல நகர்கிறது. மேலே தொங்கும் கண்ணாடி லஸ்தர்கள், பல வண்ணக்கொடி இழைந்தோடும் சலவைக்கல், அழகு தட்டு, பல கண்கவர் சித்திரங்கள், ஹாலில் நுழையும் இடத்தில் இருபுறங்களிலும் ஆள் உயரத்தில் தஞ்சாவூர்ப்பாணியில் தயாரிக்கப்பட்டுள்ள கிருஷ்ணர் படங்கள், ஹாலின் நடுவிலுள்ள டீபாய் மேல் வீர சிவாஜியின் கவர்ச்சிகரமான மண்பொம்மை.........

"கோல்ஹாப்பூர் ராணி எங்களுக்கு உறவு. சகோதரி முறையாகவேண்டும். அவர் இங்கு வந்திருந்தபோது அளித்தது!"

முன்னாள் மத்திய அரசாங்க செய்தித்துறை அமைச்சராக பணியாற்றிய திருமதி **இந்திரா காந்தி** அவர்களுக்கு 22—6—65 அன்று தஞ்சை நகராட்சி மன்றத்தால் வரவேற்பு கொடுத்தபோது எடுத்த படம்.

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. கு. காமராஜ் அவர்களுக்கு
21—7—65 அன்று தஞ்சை நகராட்சி மன்றம் வரவேற்பு அளித்தபோது எடுத்த படம்.

"உங்களுக்குத் திருவையாறு தியாகய்யா வைத் தெரியுமா? அந்த மகானைப் பற்றி நான் சில தனியான கருத்துக்களையும் கொண்டிருக் கிறேன். அவர் "நிதிசால சுகமா?" என்று கேட்டுவிட்டதால் ராஜாவை மதிக்கவில் லையோ என்பதால் அல்ல. காரணம் சொல் கிறேன். அந்த காலத்தில் ராஜ தர்பாரில் முக்கிய வித்வானாக விளங்கிய சொண்டி வெங் கடசுப்பையர் ஒருநாள் தர்பாருக்கு வரவில்லை. மறுநாள் அவரைக் கண்டதுமே காரணத்தைக் கேட்டார் மன்னர். அவர், "நேற்றைய தினம் ஒரு பையன்-பதிமூருவயதுக் குழந்தை-வந்து பாடினான். அடடா! தெய்வ கானம், போங் கள். எனக்கு உண்டான சந்தோஷத்தில் சமூகத்தில் எனக்களித்த சால்வையையே அணிவித்து மனங்குளிர்ந்தேன்" என்றாராம். நான் கேட்கிறேன். இந்தப் பதிமூரு வயதுப் பாலகனான தியாகையர் மறுநாள் தர்பாருக்கு வராமலா இருந்திருப்பார்? என்னால் நம்பவே முடியவில்லை. இதே கருத்தை சில வருஷங் களுக்கு முன் கும்பகோணத்தில் பெரிய சங்கீத வித்வான்கள் இருந்த கூட்டத்திலும் தெரி வித்தேன். ஒருவராவது மறுத்துச் சொல்ல வில்லை."

இப்படி எந்த விஷயத்தையும் தம் போக் கில் அலசி ஆராயும் இயல்புடையவர் இள வரசர். புராண சரித்திர சம்பந்தமான சினி மாக்களையே விரும்பிப் பார்க்கிறார். இவர் கடைசியாகப் பார்த்துள்ளப்படம் 'சரஸ்வதி சபதம்' இவரது கணீரென்ற குரலும் பரந்த அனுபவமும் அடக்கமும் நம்மைக் கவரத்தான் செய்கின்றன!

மூத்த இளவரசரின் அரண்மனையை ஒட்டி னாற்போல் இளைய இளவரசரின் 'சதர் மாடி அரண்மனை' இருக்கிறது. தற்போது இளைய இளவரசர் என்ற பட்டத்திற்கு உரியவர், எழுபத்தைந்து ஆண்டுகளைக் கடந்த ராஜஸ்ரீ பிரதாப சிம்ஹ ராஜா சாகேப் சத்ரபதியாவார். மூத்த இளவரசரின் சிற்றப்பா பிள்ளையான இவர் நாலைந்து ஆண்டுகளாகத் தன் அறைக்கு வெளியே வருவதேயில்லை. முதுமையால் ஏற் பட்டுள்ள நலிவே காரணம். அதனால் பரவா யில்லை. அரண்மனையின் வாயிலில் நுழைந்து இருபத்தைந்து படிகளையும் ஏறி சுமார் அறு பதுக்கு அறுபது அடி நீள அகல முள்ள விஸ் தாரமான ஹாலுக்குள் நாம் அடி வைத்ததும் இனிய முகத்துடன் துளசேந்திர ராஜா அவர் கள் வரவேற்பார். பிரதாப சிம்மரின் மூத்த குமாரர் இவர்.

விரிந்து பரந்து விளங்கும் ஹாலைச் சுற்றி லும் பார்வை செல்கிறது. எட்டடி உயரத் துக்கு இரண்டு பெரிய குத்து விளக்குகள்; சுவர்களில் 'சுதை' வேலைகள்; உத்திரங்களில் திராட்சைக் குலைகள் போன்ற முனைகள்; வண்ணப்படங்கள்!

"தற்காலப் படங்கள் ஒன்றையும் வைத் துக்கொள்ளவில்லை. அதோ அங்கே இருப்ப தெல்லாம் பழமைதான். அருகில் சென்று பார்க்கலாமா? 'இது வீர சிவாஜி. அது சரபோஜி'. என்று அவர் விளக்கிக்கொண்டே வரும்போது சற்று தள்ளினாற்போல் தொங்கிக் கொண்டிருக்கும் இரண்டு வண்ணக் காலண் டர்கள் கண்களில் படுகின்றன."

"இவை"

துளஜேந்திரா மெல்லச் சிரிக்கிறார். "ஓ! எல்லாம் நம்ம பசங்கள் வேலை!"

அந்தக் காலண்டர் படங்கள் வேறொன்று மில்லை. நடிகர் திலகமும், மக்கள் திலகமும் தான்!.

ஹாலைச் சுற்றிவிட்டு மீண்டும் அமர் [கிறோம்.

"எங்கள் பரம்பரையில் சரபோஜி மன்னர் ரொம்பவும் புகழ்பெற்றவர் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. கி. பி. 1778 முதல் 1832 வரை வாழ்ந்தவர் இவர். இவருடைய சுவீகாரத் தந்தை துளஜாஜி. துளஜாஜியைப் பற்றிச் சுவையான கதையொன்று உண்டு;

அவருக்கு ஒரு தடவை உடல் நலிவு ஏற்பட்ட தாம். எத்தனையோ வைத்தியம் செய்தும் உடம்பு தேறவில்லை. கடவுள் அருளால்தான் குணமாகும் என்றெண்ணி ஒவ்வொரு தல மாகத் தரிசித்துக்கொண்டே நாகூருக்கு வந்தார். போகும் வழியில் பல ஊசிக் காயங் களுடன் ஒரு புறு வந்து விழுந்தது. அதைப் பார்த்துக்கொண்டிருந்த ஒரு பக்கிரி 'மகா ராஜா! உங்கள்மேல் யாரோ செய்வினை செய் திருக்கிறார்கள். அதனால்தான் உங்கள் உடம்பு குணமடையவில்லை' என்று சொல்லிவிட்டு புறு வின் உடலிலிருந்து ஊசிகளை நீக்கினாராம். என்றாலும் புறு உடனேயே இறந்துவிட்டது. துளஜாஜி மனம் உருகி, ஆயிரம் வேலி நிலத்தைப் "புறுக்களின் பராமரிப்புக்காக' என்று சாசனம் செய்துகொடுத்தார். இப் போதுங்கூட நாகூர் தர்காவுக்கும் தஞ்சாவூர் அரண்மனைக்கும் சம்பந்தம் உண்டு. கந்தூரித் திருவிழாவில் முதல்நாள் கொடி, அரண்மனை சார்பில்தான் ஏற்றப்படுகிறது."

சரபோஜி மன்னர், ஆண்டொன்றுக்கு லட்சம் வராகன் பெற்றுக்கொண்டு ஆட்சியைக் கும்பினியாருக்கு விட்டுக்கொடுத்தார். அத னால் கல்விப் பணியில் பொழுதைக் கழிக்க முடிந்தது. 1829ல் அவர் காசி யாத்திரை சென்றபோது பல அரிய சுவடிகளைச் சேகரித் துக்கொண்டு வந்தார். காசியில் தங்கியிருந்த போது அவர் பெரிய தீரச்செயல் புரிந்தார்.

அந்தக் காலத்தில் கங்கையில் குளிக்கச் செல்லும் பல பெண்கள் நீருக்குள் மூழ்கிய பின் வெளியே வருவதே இல்லையாம். அவர் களுக்காக உற்றார் உறவினர்கள் தலைமுழுகி விட வேண்டியதுதான்; கங்கைத்தாய் அவர் களைத் தன்னிடம் அழைத்துச்சென்று விடு வாளாம்.

சரபோஜிக்கு இந்தக் கதையில் நம் பிக்கை ஏற்படவில்லை. இதில் ஏதோ சூது இருக்கிறது என்பது மட்டும் அவருக்குப் புரிந் தது. கங்கையில் மூழ்கிக் காணமல்போன பெண்களைப் பற்றிய விவரங்களைச் சேகரித்து ஆராய்ந்தார். எல்லாரும் நிறைய நகை அணிந்திருந்தார்கள் என்பது தெரியலாயிற்று. தண்ணீரில் வெகுநேரம் மூழ்கியிருப்பதற்குப் பயிற்சிப்பெற்ற சில பாவிகள், மூழ்கும் பெண் களைத் தண்ணீருக்குள்ளேயே வெகுதூரம் இழுத்துக்கொண்டு போய்விடுவார்கள். வழி யிலேயே பெண் மூச்சு இழப்பாள். அப்புறம் நகைகளைக் கைப்பற்றுவதில் தடையென்ன ஏற்படப்போகிறது? இதைக் கண்டுபிடித்து அந்தக் கயவர்களை அடக்கிவிட்டுத்தான் சரபோஜி திரும்பினாராம்.

நாயக்க மன்னர்களால் துவக்கப்பட்டி ருந்தபோதிலும், சரபோஜியின் காலத்தில் தான் 'சரஸ்வதி மஹால்' நிலைபெற்றது. அந்தக் காலத்தில் அரசாங்க மொழியாக இருந்தது 'மோடி' என்ற மொழியாகும். இது மகாராஷ்டிரமேதான். எழுத்துருவம் மட்டும் வேறு. அரசாங்க கணக்கு வழக்கு கள் எல்லாம் மோடியில்தான் நடைபெற் றன. இப்போதுள்ள 'சத்திரம் இலாகா'வின் பழங்கால தஸ்தாவேஜிகள் மோடியில்தான் இருக்கின்றன. மோடி தெரிந்தவர்கள் அநே கமாக இல்லாமலே போய்விட்டதால் அவை களைப் படித்து ஆராய்வது சிரமமான காரிய மாக இருக்கிறது. மோடி கற்றுக்கொள்பவர் களுக்கு உபகாரச் சம்பளத்துடன் வகுப்பு ஒன்று நடத்தப்படுகிறது. மோடி லிபியில் அதிகப் பழக்கமுடையவர் ஒரே ஒருவர்தான் தஞ்சையில் இருக்கிறார்.

நாடாண்ட முன்னோர்களைக்கொண்ட ஸ்ரீ துளஜேந்திரா, இப்போது தன் தந்தையின் சார்பில் சில அறக்கட்டளைகளையும், சொந்த சொத்துக்களையும் மட்டுமே நிர்வாகம் செய் கிறார். சரஸ்வதி மகால் நிர்வாகக் குழுவின் நிரந்தர அங்கத்தினர் பதவியும் வகிக்கிறார். 1912ல் ராஜ வம்சத்தில் பாகப்பிரிவினை ஏற் பட்டதால், சொத்துக்கள் பிரிக்கப்பட்டனவாம். அந்தக் கால மதிப்பீட்டுப்படி இரண்டு லட்சம் ரூபாய் பொறுமான முள்ளதாக சரஸ்வதி மகால் மதிக்கப்பட்டு, அரச குடும்பத்தினரால் பொதுச் சொத்தாக அறிவிக்கப்பட்டது.



மணிக்கூண்டு.

CORONATION DIAMOND JUBILEE ARCH.



பீரங்கி மேடு. கீழ அலங்கம்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்.

1918 முதல் ஐந்து பேர்களைக்கொண்ட ஒரு குழு மகாலை நிர்வகித்து வருகிறது.

"சரஸ்வதி மகாலில் ஏறக்குறைய நாற்பத்தாயிரம் சுவடிகள் இருக்கின்றன. கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஓலைச் சுவடிகள் கூட இருக்கின்றன. இவைகளையெல்லாம் உடனடியாகவும், தீவிரமாகவும் பிரதி செய்யவேண்டும்; ஆராயவேண்டும். இப்போதோ என்றால், இவைகள் அழிந்து போகாமல் பாதுகாப்புச் செய்வதற்கே நாங்கள் மிகவும் சிரமப்படுகிறோம். முதல் பெரிய பிரச்னை நிதி பிரச்னைதான்".

"அது சரி; இந்தப் படத்தைப் பாருங்கள்..."

அவர் சுட்டிக்காட்டியது ஸ்ரீ சரஸ்வதியின் படம். சுமார் பதினெட்டு அங்குல நீளமும் பதினைந்து அங்குல அகலமும் உள்ள அந்தப் படத்தை உற்றுப் பார்க்கிறோம். ஒரு மண்டபத்தில் சரஸ்வதி தேவி கொலுவீற்றிருப்பதைப் போல, அழகாய், நுட்பமான கைவண்ணத்துடன்.."

"என்ன? புரிந்ததா?"

"சரஸ்வதி படம்..."

"இதை கண்டுபிடிப்பதற்குச் சாமர்த்தியம் எதுவும் தேவையில்லை!.."

"...மேற்கொண்டு ஒன்றும் உங்களால் கண்டுபிடிக்க முடியாது! அது ஒரு பனையோலைச் சித்திரம்!"

"அப்படியா?"

"அப்படியேதான்! பனை ஓலையை அவ்வளவு அழகாகத் திரித்து இணைத்திருக்கிறார்கள்! இதைச் செய்வதற்கு எவ்வளவு பொறுமையும் கலைத்திறனும் இருந்திருக்க வேண்டும்."

"ரொம்ப.."

"இம்மாதிரிப் படங்கள், பொருள்கள், கண்காட்சியில் இருந்தால் எத்தனை பேர்கள் பார்த்துப் பரவசப்பட முடியும்? இப்போது கலைக்கூடம் நிர்மாணித்துச் சிற்பங்களை வைத்திருக்கிறார்களே, அதைப்போல் கண்காட்சியும் அமைக்கலாம். சிறு கட்டணம் வைத்தால் கூட நிறைய வருவாய்க் கிடைக்கும். அதைக் கொண்டு சுவடி ஆராய்ச்சியை இன்னும் கொஞ்சம் விரிவுப் படுத்தலாம். இல்லையா?

"இப்போது பாருங்களேன். தர்பார் மண்டபம் எவ்வளவு பரிதாபமான நிலையில் இருக்கிறது? கவனிப்பாரே இல்லாமல் போய்விட்டது. பத்துப் பதினைந்து வருடங்களுக்குள் அந்த இடம் படுமோசமாகப் போயிருக்கிறது. பெரிய அளவில்-பத்துக்கு பத்து அடியில் மன்னர் படங்கள் பல இருந்தன. அம்மாதிரி ஆயில் பெயிண்டிங் செய்வதென்றால் பல ஆயிரம் செலவாகும். இப்போது போய்ப் பாருங்கள்...தங்க நிறச் சட்டங்கள்தான் மிஞ்சியிருக்கின்றன".

"இந்த அரண்மனைக்கும் ஸ்ரீ காமகோடி மடத்துக்கும் நெடுநாளையத் தொடர்பு உண்டல்லவா?"

"ஆமாம். காஞ்சிபுரத்திலிருந்து ஸ்ரீ மடம், கும்பகோணத்துக்கு இடம் பெயர்ந்த நாட்களிலிருந்தே தொடர்பு உண்டு. அது இன்னமும் இருக்கிறது; இப்போதுகூட ஸ்ரீமடத்தின் வியாஸ பூஜையின் முதல் பாத பூஜை தஞ்சை அரண்மனையுடையதுதான்..." என்று பக்தி பரவசமாகக் கூறுகிறார் ஸ்ரீ துளஜேந்திரா.

கும்பகோணம் ஸ்ரீ மடத்தில் உள்ள பூஜாக்குருஹம் சரபோஜி மன்னர் கட்டிக் கொடுத்ததாம். அவர் ஒரு தடவை, அப்போதையப் பீடாதிபதிகளைத் தரிசிக்கச் சென்ற போது, ஸ்ரீ சுவாமிகள் ஒரு கௌரிசக்கரத்தைப் பணிவுடன் அளித்தாராம். விலை மதிக்க முடியாத பல ஆபரணங்கள் மன்னரிடம் இருந்த போதிலும், இந்த ருத்திராட்ச மாலையைப் பெறற்கரிய பொருளாக மதித்து எப்போதும் அணிவது வழக்கமாம். ஹுசூர் மாடி அரண்மனையில் உள்ள சரபோஜியின் படத்தில் இந்த கௌரிசக்கரம் பளிச்சென்று தெரிகிறது.

ஸ்ரீ துளஜேந்திரா மணந்துள்ளது--குவாலியரைச் சேர்ந்த ஓர் அரச வம்சத்து மங்கையை கொள்வினை, கொடுப்பனை யெல்லாம் வடநாட்டு அரச குடும்பங்களுடன் தானும்! ராஜ இனத்தைச் சேர்ந்த வேறுசிலர், தஞ்சையில் இருந்தாலும், திருமண உறவுகொள்ளும் அளவுக்கு அவர்களுக்கு அந்தஸ்து இல்லையாம்!

ஏறத்தாழ ஐம்பது வயதாகியும் இளமைத் துடிப்புடன் தோற்றம்தரும் ஸ்ரீ துளஜேந்திராவுக்கு ஐந்து பையன்களும், ஒரு பெண்ணும் இருக்கிறார்கள். மூத்தப் பிள்ளை உயர்நிலைப் பள்ளியில் கடைசிவகுப்பில் படிக்கிறார். இந்தத் தலைமுறையுடன் பாரத அரசாங்கம் அளித்து வரும் உதவிச் சம்பளம் நின்று விடுமாம்.

அதற்குப் பின், புகழ்பெற்ற சரபோஜியின் பரம்பரை, பாரதத்தின் சாமானியப் பரம்பரைகளுடன் ஒன்றிப்போய்விடும் என்ற எண்ணமே ஓர் ஏக்கமாக உருவெடுத்து நம் மனத்தில் சுற்றிச் சுற்றி வருகிறது!

ஆதாரம்: **தினமணி கதிர்.**

STAR FURNITURE MART

Abraham Pandithar Road,

TANJORE

(Manufacturer of Teakwood almyrahs Chairs, Tables etc).

With the best compliments for

The Municipal Centenary

Prop. Mr. P. JOHN DEVARAJ.

தொலைபேசி: 508.

— **தஞ்சையில்** ...

சகல வசதிகளுடன் தங்குவதற்கு

═ **சிறந்த இடம்** ═

குமார் லாட்ஜ்

(இர்வின் பிரிட்ஜ் சமீபம்)

காந்திஜி ரோடு, தஞ்சாவூர்.

உரிமையாளர்:

N. S. பெருமாள்,

குமார் லாட்ஜ், ராஜன் பிரஸ்,

தஞ்சாவூர்.

திரு. P. S. இராஜப்பா,
முன்னாள் நகரசபைத் தலைவர்.

பல எதிர்ப்புக் கிடையே கடன் வாங்கி தஞ்சைக்கு மின்சார விளக்கு அமைத்தார். அதனால் தொழில் வளமும், பண வருவாயும் வந்து ஒளியுடன் இன்று இந்நகரம் பிரகாசிக்கிறது.

இரண்டாம் சரபோஜி மகாராஜா.

திரு. முத்துக்குமர மூப்பனர்,
முன்னாள் நகரசபைத் தலைவர்.

மூப்பனர் காலத்து முனிசிபாலிடி

ச. கோபால்சுவாமி, ஓய்வுபெற்ற ஜெயிலர், தஞ்சாவூர்.

நகர்நாட் டாண்மை தலைதனை வகித்து
பகரொணு நலன்கள் பல்லாண்டு புரிந்து
கணிதப் பயிற்சியில் கண்யம் நிறைந்திட்ட
காருண்ய சீலர், குமரனும் முத்து

மூத்த குடிபிறந்த, திரு. முத்துக்குமர மூப்பனர், தஞ்சை பேதுருகல்லூரியில், கணிதப் பேராசிரியராக பணிபுரிந்து ஓய்வுபெற்ற பின்னர், நம், நகராட்சிக்கு தலைமைதாங்கி சீரிய தம் கணித ஆற்றலை நிர்வாகத்தில் காட்டி நடத்திவந்தார் என்பது பலரும் அறிந்த செய்தி.

பிறப்பால் உயர்ந்து, படிப்பால் உயர்ந்து, பண்பால் உயர்ந்து, எளிமையால் ஏற்றம் பெற்று, உழைப்பால், ஊக்கத்தால், உயர்ந்த தன்னலமில்லாத சேவையால் தஞ்சை மக்களின் நெஞ்சத்திலே நீங்கா இடம்பெற்று வாழ்ந்து மறைந்த, நம் நகரத்தந்தை திரு. முத்துக்குமர மூப்பனர் நினைவுச் சின்னமாக, மூப்பனர்பூங்காவும், மூப்பனர் சாலைமட்டுமல்ல, என்னைப்போன்ற அறுபது ஆண்டைத்தாண்டி வாழும் தஞ்சை நகர மக்களின் எண்ணங்களிலெல்லாம் என்றும் இடம்பெற்று வாழ்கிருர்; என்றும் வாழ்வார், என்று துணிந்து கூறுகிறேன். ஏன் இந்தத் துணிவு என்ற இந்த ஞாயமானதோர் கேள்விக்கு இந்த நகராட்சி நூற்ருண்டு மலரின் வாயிலாக விடை தந்து, நகரத்தந்தை திரு. மூப்பனரை நினைவுப்படுத்த விரும்புகிறேன். நான் ஏற்றுக்கொண்ட பொருள் இன்றைய தலைமுறையினருக்கு ஓர் நவீனமாகவேதொனிக்கும். ஆனல் இவை உண்மையான பழைய நகராட்சி சரித்திரமாகும் என்பதினை முதற்கண் கூறிக்கொள்கிறேன். இற்றைக்கு நாற்பதாண்டுகட்கு முன்னர் வாழ்ந்து இன்றும் வாழ்ந்துவரும் முதிய நண்பர்களுக்கு, முன்னையகால ஞாபகங்களை நினைவுப்படுத்திக்கொள்ளும் வாய்ப்பாக அமையும் என்றும், பின் சந்ததியினர், கடைபிடிக்கக்கூடிய சில அம்சங்கள் உண்டு என்பதும் என் எண்ணம்.

நாம் ஆங்கில ஏகாதிபத்தியத்திலிந்து, விடுதலை ஆவதற்கு முன்னர், இருபதாவது நூற்ருண்டின் தொடக்கத்தில், கல்விக் களஞ்சியமென போற்றப்பட்ட தஞ்சை மாவட்டத்தில் அன்று இருந்த கலைக் கல்லூரிகள் இரண்டு, ஒன்று கும்பகோணத்தில் இன்றும் உள்ள கல்லூரி ஒன்று. மற்ருென்று. தஞ்சை புனித பேதுருவின் கிருஸ்துவ பாதிரிமார்கள் நடத்திவந்த S. P. G. காலேஜ். பின் கூறிய இந்த S. P. G. காலேஜ். 1910ம் ஆண்டுக்கு முன்னதாகவே மூடப்பட்டுவிட்டதாக தெரிகிறது. எஞ்சி, இந்த மாவட்டத்துக்காக இருந்த கலைக் கல்லூரி கும்பகோணம் கல்லூரி ஒன்றேதான். இத்தருணத்தில் நம்முடைய மாவட்டத்தில் மட்டும் இன்று நம்மை சுற்றியுள்ள கல்லூரிகள் எத்தனை அதில் பயிலும் மாணவர் எண்ணிக்கை எத்தனை, அதில் பேதமற்று பாமரமக்களும் வசதியுடன், படிகக் ஏற்பட்டுள்ள வாய்ப்புகள் எத்தனை என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டும். தஞ்சை S. P. G. கலைக் கல்லூரில், மிக பிரபலமான ஆசிரியர் குழாம் இருந்தது. அதில் குறிப்பாக டைகர் ஷண்முகம் பிள்ளை என்ற ஆங்கிலப் பேராசிரியரைப் பற்றியும் கணிதமேதை திரு. முத்துக்குமர மூப்பனரைப்பற்றியும் அதிகமாகப் பேசப்பட்டது. இவர்கள் பணியாற்றிய கல்லூரி மூடப்பட்டவுடன், பொதுநல சேவைகள் பல துறைகளில் ஈடுபட்டு நகர நலனுக்காக தங்கள் பணியினை ஈந்தார்கள். அதில் குறிப்பிடதக்கதாக இவர்கள் இருவரும், தஞ்சையில், (The Permanent Bank) சாசுவத நிதி என்ற ஸ்தாபனத்தை 1901ம் ஆண்டு நிறுவித்

தந்தார்கள். இவர்களால் தோற்றுவிக்கப்பட்ட இந்த நிதி தன்னுடைய வைரவிழாவினையும் அண்மையில் கொண்டாடி மகிழ்ந்துள்ளது. இந்த நிதியின் வெள்ளி விழாவுக்காக புனையப்பட்ட ஒரு கவிதையையும் காணலாம்.

